3. அமைச்சரின் அறிக்கை

தஞ்சை கோயிலினுள் இராச இராச சோழன் சிலையை நிறுவுவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக விதி 82 இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராச இராச சோழனின் சிலையொன்றை, அவரது ஆயிரமாண்டு நினைவு நாளைக் கொண்டாட தஞ்சையில் அமைக்கப்பட்ட பொதுமக்கள் குழு, கோயிலுக்குள் நிறுவ அனுமதி கேட்டதும், இது குறித்து இந்த அரசு, மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு பல கடிதங்கள் எழுதியுள்ளதும், இம் மாமன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். இச் சிலையை வெளிப்புற மதில் சுவருக்கு அருகாமையில் உள்ள ஓரிடத்தில்தான் வைக்க வேண்டு மென்று, இக் கோயிலின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்றுள்ள மத்திய அரசின் தொல்பொருள் துறை வற்புறுத்தி வந்துள்ளது. இந்த இடத்தில் இச்சிலையை அமைப்பது மாண்புமிக்க அம் மன்னரின் நினைவுக்குச் சிறப்புச் செய்வதாக அமையாது என்று பொதுமக்க ளிடையே ஏற்பட்டிருந்த பலமான கருத்தை, இந்த அரசு மத்திய அரசுக்குப் பன்முறை எடுத்துச் சொல்லிவிட்டது. நானே நேரில் கோயிலுக்குச் சென்று, இச் சிலையை வைப்பதற்குத் தகுந்த இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். நேரிலும் கூறினேன். நாம் தேர்ந்தெடுத்த இடத்தில் சிலையை வைப்பதற்கு அனுமதிதர இயலாதென்று மத்திய அரசிடமிருந்து இறுதியான பதில் நேற்று வந்துள்ளதை வருத்தத்துடன் இம்மன்றத் திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இச்சிலையைக் கோயிலுக்குள் அமைப்பது கோயிலின் தொல் பொருள் சிறப்புக்கு ஊறு விளைவிக்கும் என்று மத்திய அரசு தெரி வித்துள்ள கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. பழமைப் பொலிவு கெடா வண்ணம் உருவாக்கப்பட்ட சிலை அமைப்பதால் தொல்பொருள் சிறப்புகெட்டுவிடுமென்றால், மின்னொளி போன்ற நவீன நாகரீக வசதிகளைக் கோயிலில் அமைத்துள்ளதும் தொல் பொருள் சூழலைப் பாதிக்குமென்று வாதிட இடமேற்படும்.

எனினும், நீண்ட கடிதப் போக்குவரத்துக்குப் பின்பும் நேரில் பலமுறை விளக்கியதற்குப் பின்பும் மத்திய அரசு நம் கருத்தை ஏற்றுக்கொள்ளப் பிடிவாதமாக மறுக்கிறது என்ற காரணத்தாலும், அவர்கள் சுட்டிக் காட்டுகிற இடத்தில் சிலையை அமைப்பது, கோயிலைக் கட்டிய மாமன்னரைக் காவற்காப்போன் நிலையில் வைத்து இழிவுபடுத்துவதற்குச் சமமாகுமென்று நாம் அஞ்சுவதாலும், இச்சிலையைக் கோயிலுக்கு வெளியே பொது இடம் ஒன்றில் நிறுவுவது தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளவர்களாயுள்ளோம்.

அவ்வாறே இச்சிலையைக் கோயிலுக்கு வெளியே, மாநில அரசுக்குச் சொந்தமான இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். தமிழக வரலாற்றில் தகைமைசால் இடத்தையும், தமிழர் உள்ளத்தில் நீங்காத இடத்தையும் பெற்றுள்ள இம்மா மன்னரின் சிலையைப் பொருத்தமற்ற—பெருமைக்கு ஏற்காத இடமொன்றில் வைத்து மாமன்னரின் நினைவுக்கு மாசு கற்பிக்கும் செயலுக்கு நாம் உடந்தையாயிருக்க மறுத்துவிட்டோமென்ற ஆறுதலாவது நமக்கு எஞ்சி நிற்கட்டும் என்ற அடிப்படையில், இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் ஆதரவு கிட்டுமென்று நம்புகிறேன். இது போன்ற சிறு பிரச்னைகளில் கூட மக்களின் ஒருமித்த கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் செயலாற்றும் உரிமை, இன்றைய அமைப்பில் மாநில அரசுக்கு இல்லையே என்ற வருத்தமும் வேதனையும் அடைவதைத்தவிர, வேறுவழியில்லையே என்ற ஏக்கத்தையும் இம்மாமன்றம் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

4. 1972–73-ஆம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண்–13—கல்வி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,24,22,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" .